8th November 1966]

ஊழியர்களுக்குப் பென்ஷன் வழங்கும் திட்டம் யோசனையில் இருக்கிறது என்று கூறினார்கள். அந்த யோசனை எந்த அளவில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் அங்கத்தினர் கேட்டதற்கு ஏற்கனவே பதில் அளித்தேன். அதற்குமேல் விவரம் என்னிடம் இல்லை.

மூக்குப்பீறி பஞ்சாயத்து

* 528 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்** : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில், மூக்குப்பீறி பஞ்சாயத்துத் தலைவர் 1965-66-ம் வருடங்களில், அகாரணமாய் இரண்டு பஞ்சாயத்து மெம்பர்களை பதவியினின்றும் நீக்கியதன் மூலம் பதவியை துஷ்பிரயோகம் செய்து விட்டார் என்ற புகார் ஜில்லா கலெக்டருக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) மூக்குபீறி பஞ்சாயத்து தலைவர் வேண்டுமென்றே சட்ட ஏற்பாடுகளையும், விதிகளையும் நிறைவேற்ற மறுப்பதால், அவரைப் பதவியினின்று நீக்குவதற்கு காரணம் காண்பிக்க சென்னை பஞ்சாயத்து சட்டம் 150-ஆவது பிரிவின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு அறிவிப்பு விடுத்திருக்கிறார்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், புதிய சட்டப் பிரகாரம் ஒரு குறிப்பிட்ட பஞ்சாயத்துத் தலைவர் தவறுசெய்துவிட்டார் என்று அறிந்த பிற்பாடும்கூட அந்தப் பஞ்சாயத்துக்கு அந்தத் தகவலை அனுப்பி அந்தப் பஞ்சாயத்து உறுப்பினர்களுடைய பெரு வாரியான ஓட்டுக்களைப் பெற்றுத்தான் அவரை நீக்கமுடியும் என்று விதிமுறைகள் இருக்கின்றனவா? அந்த விதிகளை மாற்றியமைக்கவேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சட்டத்தைத் திருத்தவேண்டிய அவசியமில்லை. இப்பொழுது இருக்கின்ற விதிகளின்படி நடவடிக்கை எடுக்கலாம்.

Property tax

* 529 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have proposed to defer the quinquennial revision of property tax in all Municipalities in the State, with effect from April 1966; and

(b) if so, the reasons therefor?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) & (இ); ஆம், வரி செலுத்து வோர் சங்கங்கள், குழுக்கள், பல்வேறு நிறுவன அமைப்புகள், சில நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் மூலம் பொதுமக்களிட மிருந்து இது குறித்து ஏராளமான முறையீடுகள் வந்துள்ளன. இவற்றை அரசாங்கம் கவனமாகப் பரிசீலனை செய்தது. 1—4—1966 முதற்கொண்டு பொதுவாக வரி விதிப்பு திருத்தி யமைக்கப்பட வேண்டிய நகராட்சிகளைப் பொறுத்த வரையில், அவற்றில் அத் தேதி முதற்கொண்டு அவ்வாறு திருத்தியமைப்ப தற்கான நடவடிக்கைகள் 1—4—1966 முதற்கொண்டு தொடங்கும் இரண்டு அரை ஆண்டுகளுக்கு நிறுத்திவைக்கப்படவேண்டுமென தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிச் சட்டத்தின் IV-வது விவர அட்டவணையின் 8 (1-A) (a) விதியின்கீழ் அரசாங்கம் கட்டளையிட்டுள்ளது.

திரு. செ. மாதவன்: அந்தத் தேதிக்கு முன்னாலேயே வரியை உயர்த்தி இருந்தால் ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்து திருத்த முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சமீபத்தில் நிறுத்தி வைத்துள்ள quinquennial revision 15 நகராட்சிக்கு பொருந்தும். மற்ற நகராட்சிகளுக்கும் இந்த விதிமுறைகளை நீடிக்க சர்க்காருக்கு உத்தேசம் இல்லை.

நாகம்பந்தல் லிங்கத்தேரி

*530 கேள்வி.—**திருமதி செகதாம்பாள் வேலாயுதம்**: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உடையார்பாளையம் தாலுக்காவில் நாகம்பந்தல் கிராமத்தி லுள்ள ஏரியிலிருந்து நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தாமல் குடிப்பதற்கும், குளிப்பதற்கும் பயன்படுத்த வேண்டுமென்று அண்மையில் அக்கிராம பொது மக்கள் கையெழுத்திட்டு அனுப்பிய மனுவின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: பாசனத்துக்குப் பயன்பட்டு வரும் லிங்கத்தேரியின் நீரை குடிதண்ணீராகவும் மற்றும் பல சமுதாயக் காரியங்களுக்கும் பயன்படுத்துமாறு வேண்டி, நாகம்பந்தல் பஞ்சாயத்துத் தலைவரிடமிருந்து 9—2—1966 தேதி யிட்ட ஒரு கடிதமும் அக்கிராம மக்களிடமிருந்து ஒரு முறையீடும், திருச்சிராப்பள்ளி கலெக்டருக்கு வந்தன. ஜயங்கொண்டான் தாசில்தாரையும், அரியலூர் வருவாய்க் கோட்ட அதிகாரியையும் கலந்தாலோசித்த பிறகு, தக்க நடவடிக்கையைக் கலெக்டர் மேற் கொண்டார். வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவேண்டியுள்ள அவசியத்தைக் கருதி, இந்த ஏரியின் நீரைப் பாசனமல்லாத பிற காரியங்களுக்குப் பயன்படுத்துவது அவசியமில்லை என்று கருதப் பட்டது.

திருமதி செகதாம்பாள் வேலாயுதம்: தலைவர் அவர்களே, இது ஆயிரக்கணக்கானவர்களுக்கு குடிதண்ணீருக்கு பயன்படுகிற குள மாக இருக்கிறது. ஆடுமாடு குளிப்பாட்டும் வசதியும் இருக்கிறது.